# COVID-19 தடுப்பூசி சுருக்கமான தகவல்கள்






COVID-19 தடுப்பூசிகளை அங்கீகரிக்கும்போது அனைத்துப் பாதுகாப்புப் படிமுறைகளும் பின்பற்றப்பட்டன. தடுப்பூசிகள் **பாதுகாப்பானவையாகவும், வினைத்திறனுடையவையாகவும் அனைத்துத் தரங்களையும் பூர்த்திசெய்பவையாகவும் இருந்தமையால்தான்** கனடா சுகாதாரப் பிரிவு (Health Canada) அவற்றை அங்கீகரித்தது.

COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவையாகவும் COVID-19 தொற்றுக்களைத் தடுப்பதில் மிகவும் வினைத்திறனுடையவையாகவும் இருக்கின்றன. COVID-19 தடுப்பூசிகள் 120,000 மக்களில் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன, மில்லியன் கணக்கானோர் ஏற்கனவே அவற்றைப் பெற்றுவிட்டனர்.





COVID-19 எவருக்கும் வரலாம், அத்துடன் அவர்கள் மிகவும் சுகவீனமடையலாம். தடுப்பூசி ஒன்றைப் பெற்றுக்கொள்வதென்ற உங்கள் தெரிவு, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் **ஏனையோரைப் பாதுகாக்கவும்** உதவ முடியும்.

mRNA தொழில்நுட்பம் புதியதல்ல. COVID-19 mRNA தடுப்புமருந்துகள் COVID-19 உருவாக்கும் வைரசுக்கு எதிராகப் போராடுவதற்காகப் பிறபொருளெதிரிகளை உருவாக்கும்படி தகவல் ஒன்றை உங்களுடைய கலங்களுக்கு அனுப்புகின்றது. இதனால் உங்களுடைய DNA ஐ மாற்றமுடியாது.





உங்களால் இயன்றளவு விரைவாக தடுப்பூசி பெற்றுக்கொள்வது முக்கியமாகும். எவ்வளவு விரைவாக கூடுதலான மக்கள் தடுப்பூசி பெறுகின்றனரோ அவ்வளவு விரைவாக இயல்பு வாழ்க்கைக்கு நாங்கள் திரும்பமுடியும்.

**york.ca/COVID19VaccineInfo**

**Access York: 1-877-464-9675**

York Region